# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**43/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி சாந்தி | ஊர் | : | தஞ்சாவூர் |
| க.பெ. | : | திரு. பிரேம்குமார் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 63 | தொழில் | : | Retired Army officer |

2025ம் ஆண்டு திங்கள் நவம்பர் 18ஆம்நாள் **வா.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 18.1.1944 தேதியிட்ட துளசியம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 7.8.2000 தேதியிட்ட ரத்தினத்தம்மாள் பெயரில் உள்ள சிட்டா நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். 9.9.2000தேதியிட்ட அ பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன் 24.7.2000 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு நகல் தாக்கல் செய்கிறேன். 17.4.2003 தேதியிட்ட வீட்டு வரி ரசீது நகல் தாக்கல் செய்கிறேன். 29.3.2006 தேதியிட்ட சொத்துவரி பெயர் மாற்றம் உத்தரவு நகல் தாக்கல் செய்கிறேன். 21.9.1968 தேதியிட்ட துளசியம்மாள் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 26.3.1999 தேதியிட்ட T.S. பெரியசாமியின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 6.5.1999 தேதியிட்ட T.S. பெரியசாமியின் வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5**ஆகும். 11.2.2021 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6** ஆகும். 11.2.2021 தேதியிட்ட அஞ்சலக ரசீதுகள் அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7**

ஆகும். ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8**ஆகும். 3.3.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9**ஆகும்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**